# தொழில்

## தொடங்கலாம் வாங்க..!

**100–க்கும் மேற்பட்ட தொழில்கள்**

# சுய தொழில்

## வழிகாட்டி

www.nithrabooks.com | books@nithra.mobi | Cell: 98659 24040

Copyright is reserved to the publisher, therefore the person who will try to imitate or try to print this book illegally or without the prior written permission of this publisher in any form, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

இந்தப் புத்தகத்தைப் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி
மறுபதிப்பு செய்வதோ, அச்சேற்றுவதோ, நகல் எடுப்பதோ
கூடாது. மீறினால் காப்பிரைட் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

நூலின் பெயர் : **சுய தொழில் வழிகாட்டி**

பக்கங்கள் : 180

விலை : ரூ. 150

பதிப்பு : 2020

உரிமை : பதிப்பகத்தாருக்கே

In the compilation of this book all possible precautions have been taken to ensure that the informations provided is correct. Yet the publisher / authors will nto be held responsible for any printing errors or damage resulting from any inadvertent omission or inaccuracies in this book. However suggestions for the improvement of this book (Including printing errors, ommissions, etc. if any) are welcome and these will be incorporated in the subsequent editions of this book.

---

Published by : **P. Gokulanathan, Nithra Publications,** AV Plaza 3rd & 4th Floor, South Car Street, Tiruchengode - 637211.

# சுய தொழில்


| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | விவசாயம் | 01 – 53 |
| 2 | கைவினை சுயதொழில் | 54 – 70 |
| 3 | குடிசை தொழில் | 71 – 135 |
| 4 | பூச்செடி வளர்ப்பு | 136 – 140 |
| 5 | மற்ற தொழில் வகைகள் | 141 – 177 |

# விவசாயம்

## காளான் வளர்ப்பு !

குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தருவதில் சிறந்து விளங்கும் ஒரு தொழில் எதுவென்றால் அது காளான் வளர்ப்பு தான், நீங்கள் நினைக்கலாம் இவற்றில் அவ்வளவு லாபம் கிடைத்துவிடுமா என்று ஆனால் உண்மையில் சுயதொழில் செய்து சாதிக்க வேண்டும் என்பவர்களுக்கு இத்தொழிலானது ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

**காளான் வளர்க்கத் தேவையானவை :**

- 16 அல்லது 18 சதுர மீட்டர் இடம்
- பாலித்தின் பை
- வைக்கோல்
- தண்ணீர்

**காளான் வளர்ப்பு செய்முறை :**

- முதலில் 16 அல்லது 18 சதுர மீட்டர் இடம் (குடிசை அல்லது ரூம்) தயார் செய்ய வேண்டும்.
- வைக்கோலில் உள்ள கிருமிகளை சுத்தம் செய்ய வேண்டும். அதற்கு கொதிநீரில் முக்கி வைக்கோலை சுத்தம் செய்ய வேண்டும் அல்லது இரசாயனம் பயன்படுத்தி சுத்தம் செய்து கொள்ளலாம்.
- 12-24 என்ற அளவுள்ள பாலித்தின் பையில் வைக்கோலை முதலில் 05 செ.மீ. அளவு நிரப்ப வேண்டும். பின்பு காளான் விதையை 20 கிராம் எடுத்து நிரப்பப்பட்ட வைக்கோல் ஓரத்தில் தூவ வேண்டும். (குறிப்பு : காளான் விதைகள் உற்பத்தியாளர்களிடமோ அல்லது அங்காடி கடைகளிலோ கிடைக்கும்.)

- இதுபோல் மாறி மாறி 07 முதல் 08 அடுக்கு போட வேண்டும். பின்பு பக்கவாட்டில் 03 துளைகள் வீதம் நான்கு பக்கத்திலும் 12 துளைகள் போட வேண்டும்.

- பின்பு குடிலின் மையத்தில் தயார் செய்து வைத்த பாலித்தின் பைகளை கட்டித் தொங்க விட்டு தினமும் தண்ணீரை பாலித்தின் கவரை சுற்றி தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளித்து வந்தால் 10வது நாளில் காளான் விதைகள் வெள்ளை நிறமாக துளிர் விடுவதைக் காணலாம்.

- பின்பு 27-ஆம் நாளில் காளான் மொட்டுக்கள் இதிலிருந்து தோன்றும். இதை 03 நாட்களில் அறுவடை செய்து விற்பனை செய்ய வேண்டும். ஒரு மாதத்துக்கு 2 ஆயிரம் கிலோ வரை காளான் உற்பத்தி செய்தால் 3 லட்சம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.

## காடை வளர்ப்பு முறை !

அசைவப் பிரியர்கள் ஆடு கோழிக்கு அடுத்தபடியாக விரும்புவது காடை இறைச்சியைத்தான். அதனால் காடைக்கு எல்லா பருவத்திலும் மவுசு உண்டு. இதைச் சரியாகப் புரிந்துகொண்ட பலபேர் காடை வளர்ப்பில் நல்ல லாபம் ஈட்டி வருகிறார்கள்.

அந்த வகையில் குறைந்த முதலீட்டில் காடை வளர்ப்பில் எவ்வாறு அதிக லாபம் பெறுவது என்பதை பற்றி பார்ப்போம்.

**காடை வளர்ப்பின் முக்கிய அம்சங்கள் :**

- காடைகளில் பல ரகங்கள் இருந்தாலும் நாமக்கல் - 1, ஜப்பானிய காடைகள் ஆகிய இரண்டுமே வளர்ப்புக்கு மிகவும் ஏற்றது. இதனை வளர்க்க அதிக இடம் தேவைப்படாது. ஒரு சதுர அடியில் 5 காடைகள் வரை வளர்க்கலாம். கோழிகள் ஆடுகளை விட காடைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளதால் எல்லா தட்பவெப்ப நிலையிலும் வளரும். மேலும் இதற்கு மிகக் குறைந்த அளவு தீவனமே போதுமானது. காடைகுஞ்சுகளானது 5 முதல் 6 வாரத்துக்குள் இறைச்சிக்கு தயாராகி விடுவதால் முதலீடு செய்த ஒன்றரை மாதத்திலேயே வருமானம் பெற முடியும்.

## கொட்டகை அமைப்பு :

- ❖ காடைகளை ஆழ்கூளமுறை, கூண்டு முறை என இரண்டு வகைகளாக வளர்க்க வேண்டும்.

## ஆழ்கூள முறை :

- ❖ ஒரு சதுர அடிக்கு ஆறு காடைகள் வரை, முதல் இரண்டு வாரம் ஆழ்கூள முறையில் வளர்த்துப், பின் அவற்றை கூண்டுகளுக்கு மாற்றி வளர்க்க வேண்டும். ஆழ்கூளத்தில் நன்கு காய்ந்த மணல் கீழாகவும் ஈரத்தை உறிஞ்சக்கூடிய காய்ந்த தென்னை நார்க் கழிவு அல்லது நிலக்கடலை தோல் மேலாகவும் பரப்பியதாக இருக்க வேண்டும். சுமார் 5 முதல் 10 செமீ உயரத்துக்கு ஆழ்கூளம் இருக்க வேண்டும். காடைகளை கம்பிவலைக் கூண்டுகளில் வளர்ப்பதாக இருந்தால் முதல் வாரத்தில் கூண்டில் அடிப்பகுதியில் கெட்டியான அட்டைகளை விரிக்க வேண்டும்.

## கூண்டு முறை வளர்ப்பு :

- ❖ கூண்டுகளை 4 முதல் 5 அடுக்குகள் வரை அமைத்து ஒவ்வொரு கூண்டுக்கும் கீழே தகடுகள் பொருத்தி கழிவுகளை தினமும் அப்புறப்படுத்த வேண்டும்.

- ❖ கூண்டின் அடிப்பகுதி மற்றும் பக்கவாட்டு கம்பிவலை 1.5 க்கு 1.5 செ.மீ. உள்ளதாக இருக்க வேண்டும்.

- ❖ 3 முதல் 6 வாரங்களுக்கு 4 அடி நீளமும் 2 அடி அகலத்திலும் 50 காடைகள் வரை வளர்க்கலாம்.

- ❖ முதல் நான்கு வார காலத்துக்கு தீவனத் தொட்டி 2 - 3 செமீ உயரத்திலும் தண்ணீர்த் தொட்டி 1 - 1.5 செமீ உயரத்திலும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். காடை கூண்டுக்கு 60 மெகாவாட் திறன் கொண்ட பல்பு வெளிச்சம் போதுமானது.

**தீவனம் :**

- ✓ காடை தீவனம் மிக சிறிய துகள்களாக இருப்பது மிகவும் அவசியம். மக்காச்சோளம் எண்ணெய் நீக்கிய அரிசி, தவிடு, கடலை புண்ணாக்கு போன்றவைகளை வழங்கலாம்.
- ✓ காடை குஞ்சுகளுக்கு புரதசத்து அதிகமாகவும் எரிசக்தி குறைவாகவும் இருக்க வேண்டும். சுத்தமான தண்ணீரை காடைகளுக்கு வழங்க வேண்டும்.
- ✓ இவ்வாறு குறைந்த செலவில் காடை குஞ்சுகளை வாங்கி அவற்றை 6-7 வாரம் வரை பராமரித்தால் அவை இறைச்சிக்காக தயாராகிவிடும். அதன்பின் ஒரு காடை 30 ரூபாய் வரை விற்காலாம்.
- ✓ எனவே குறைந்த முதலீட்டில் நிலையான மாத வருமானம் பெற விரும்புவர்கள் காடையை வளர்த்து பயன் பெறலாம்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு !

வீட்டில் இருந்தபடியே சம்பாதிப்பதற்கான ஒரு சிறந்த வழி எதுவென்றால் அது நாட்டுக் கோழி வளர்ப்பு தான். குறைந்த முதலீட்டில் குறைந்த காலத்திலேயே அதிக வருமானம் கொடுப்பது நாட்டுக்கோழிகள் தான். அதனால் தான் பலரும் நாட்டுக்கோழி வளர்ப்பில் ஈடுபடுகிறார்கள். 50 நாட்டுக் கோழிகளை வளர்த்தால் அதன் மூலம் எந்த அளவு லாபம் கிடைக்கும் என்பதை காணலாம்.

50 நாட்டுக் கோழிகள் ஒரு குடும்பத்து செலவுக்கு போதுமான அளவு பொருளாதாரத்தை ஈட்டித்தருகிறது, இது குறித்து பார்ப்போம்.

**கட்டமைப்பு செலவு :**

- ❖ கோழி வளர்ப்புக்கு கொட்டகை அமைப்பு முக்கியச் செலவாகும். பொதுவாக நாட்டுக் கோழிகளை வளர்க்க கீற்றுக் கொட்டகையே போதும்.

- 1 கோழிக்கு 1 சதுர அடி என்ற அளவில் 50 கோழிகளுக்கு 50 சதுர அடி கொட்டகை அமைக்கலாம். கொட்டகையின் நீள அகல உயரம் முறையே 10 அடி 5 அடி 12 அடி கொண்டதாக இருக்க வேண்டும்.

- தற்போது சித்து நாட்டுக் கோழிகள் வளர்ப்பு அதிகளவில் காணப்படுகிறது. சுத்தமான நாட்டுக் கோழிகளான சிறுவிடை கோழிகள் அல்லது சித்துக்கோழிகளின் விலை சற்று அதிகம்.

- ஆனால் இவற்றின் சுவையும் அதிகம். வளர்த்து விற்பனை செய்யும் போது நல்ல விலைக்கு போகும்.

- கோழிகளை வாங்கும் போது அனுபவமுள்ள கோழி வளர்ப்பாளர்களை அழைத்துச் சென்று அல்லது மருத்துவர்களின் வழிகாட்டுதலின்படி கோழிகளை வாங்கி வரலாம்.

**குஞ்சுகள் பெருக்கம் :**

- ✓ புறக்கடை முறையில் 50 குஞ்சுகளை வாங்கி வளர்க்கும் போது அவை ஒரு கட்டத்தில் அடைகாத்து குஞ்சு பொரிக்கும். 50 கோழிகளை வளர்க்கும் நிலையில் அவை அனைத்தும் சேர்த்து ஆண்டிற்கு 10 முதல் 15 முறை குஞ்சு பொரிக்கும்.

- ✓ முறையாக பராமரித்தால் 30 முதல் 35 எண்ணிக்கை வரை அடைகாக்கும் திறன் இருக்கும்.

- ✓ 25 கோழிகள் அடைகாத்து ஒரு கோழிக்கு 8 குஞ்சுகள் என்ற எண்ணிக்கையில் பொரிக்கப்படுவதாக வைத்துக் கொண்டால் ஆண்டுக்கு இதன் மூலம் 200 குஞ்சுகள் கிடைக்கும்.

- ✓ இவற்றை வளர்த்து விற்பனை செய்யும் போது ஒரு கிலோவுக்கு 350 ரூபாய் என்ற விலையில் இன்றைய சந்தை விலையில் விற்பனை செய்யலாம். இதன் மூலம் 70000 வரை வருமானம் ஈட்டலாம்.

## சரியான பராமரிப்பு :

நாட்டுக்கோழிகளை எந்த அளவுக்கு சரியாக பராமரிக்கிறோமோ அந்த அளவுக்கு அதில் லாபமும் அதிகம்.

கோழிகளை ஈரம் இல்லாத கொட்டகையில் வளர்த்தல், நோயுற்ற கோழிகளை மற்ற கோழிகளில் இருந்து உடனே பிரித்து விடுதல், சரிவிகித தீவனம் அளித்தல், சுத்தமான தண்ணீரை அளித்தல் உள்ளிட்ட சரியான பராமரிப்பு உத்திகளால் நாட்டுக்கோழிகளை நோய் தாக்கப்படாமலும் இறப்பு ஏற்படாமலும் பாதுகாக்கலாம். கோழிகளை வளர்ப்போருக்கு இழப்பும் ஏற்படாமல் தடுக்கப்பட்டு லாபமும் கிடைக்கும்.

# இறால் வளர்ப்பு !

இறால் பொதுவாக நன்னீரிலும் உவர்நீரிலும் காணப்படும் ஒரு நீர் வாழ் உயிரினம். இது இறால் மீன் எனவும் அழைக்கப்படுகிறது. மனிதர்களால் விரும்பி உண்ணப்படும் இறைச்சியாகவும் இறால் திகழ்கிறது. இறால்கள் கூட்டமாக வாழும் தன்மையுடையது. நீரில் இது பின்புறமாகவும் நீந்தக்கூடியது. இத்தகைய சிறப்பு மற்றும் லாபம் மிக்க இறால் வளர்ப்பு பற்றி பார்ப்போம்.

## இடத்தை தயார்படுத்துதல் :

- இறால் வளர்க்கும் குளங்களை நன்றாக உலர வைத்து இரண்டு முறை உழவு செய்ய வேண்டும். நிலத்தின் மண்ணை சோதனை செய்து பிறகு தேவையான தாது உப்புகளை இட்டு பின்னர் இறுதி உழவு செய்ய வேண்டும்.

- குளத்தைச் சுற்றிலும் நண்டு வலை மற்றும் பறவை விரட்டும் வலைகளை அமைக்க வேண்டும். மேலும் குளங்களுக்கு உள்ளே மற்றும் வெளியே சென்று வருவதற்கு ஒரே ஒரு நுழைவுவாயில் மட்டும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

- அதுமட்டுமல்லாமல் குளத்திற்கு நீரேற்றம் செய்ய உதவும் நீர்த்தேக்கத் தொட்டியை சுற்றிலும் நண்டு வலை மற்றும் பறவை விரட்டும் வலைகளை அமைக்க வேண்டும்.

- அதன் பின்னர் முறையாக கிருமி நீக்கம் செய்யப்பட்ட மோட்டார் பம்புகள் கொண்டு மூன்று நிலைகளில் நீரை வடிகட்டி குளங்களுக்கு நீர் நிரப்ப வேண்டும். நீர் ஏற்றி மூன்று நாட்கள் கழித்து மாலை வேளையில் குளத்தில் உள்ள நீரை முறையாக கிருமிநீக்கம் செய்ய வேண்டும். பின்னர் மூன்று நாட்கள் கழித்து நீரில் பச்சையம் நிலைப்பட ஏதுவாக, உரங்கள் கொடுக்க தொடங்க வேண்டும்.

- இந்நிலையில் பச்சையம் நிலைப்பட ஏதுவாக குளங்களில் காற்றூட்டிகள் அமைக்க வேண்டும். பின்னர் பச்சையம் குளத்தில் நிலைப்பட்டவுடன் கடலோர நீர்வாழ் ஒழுங்கு முறை ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட குஞ்சு பொரிப்பகத்தில் இருந்து நோய் அற்ற இறால்குஞ்சுகளை வாங்க வேண்டும்.

- முன்னதாக நம்முடைய தண்ணீரை அவர்களிடம் கொடுத்து பரிசோதிக்க வேண்டும். அவர்கள் அந்த நீரில் பி.ஹெச் மற்றும் சன்லிட்டி ஆகியவற்றைக் கண்டறிந்து அதற்கேற்றவாறு இறால்குஞ்சுகளை தயார் செய்து கொடுப்பார்கள்.

- முதலில் நூறு குஞ்சுகளை மட்டும் வாங்கிவந்து குட்டையில் விடவேண்டும். 48 மணி நேரம் அதனைக் கண்காணித்து எல்லாம் உயிரோடு இருந்தால் திரும்பவும் சென்று நமக்கான இறால்குஞ்சுகளை வாங்க வேண்டும்.

- இறால் குஞ்சுகள் விட்டவுடன் ஒரு மாதத்திற்கு அதில் குஞ்சுகள் இருக்கிறதா இல்லையா என்பது தெரியாது. ஒரு ஏக்கருக்கு இரண்டு லட்சம் குஞ்சுகள் விடலாம். ஒரு நாளைக்கு இரண்டு வேளை தீவனங்கள் கொடுக்க வேண்டும்.

- இறாலானது நான்கு சமயங்களில் தன்னுடைய தோலை உரித்துக்கொள்ளும். இப்படி தோல் உரிக்க உரிக்கத்தான் அது பெரிதாக வளர்ச்சியடையும்.

- இறால்குஞ்சுகளுக்கு என மூன்று அளவில் தீவனங்கள் உள்ளன. இதில் புரோட்டீன் அதிகம் உள்ளன. வாரம் ஒரு முறை குஞ்சுகளை பிடித்து அதன் அளவுக்கு ஏற்றவாறு தீவனம் கொடுக்க வேண்டும். இறால் வளர்ப்பு என்பது மொத்தம் 90 நாட்கள் தான்.

## செயற்கை ஆக்சிஜன் :

- நீரில் செயற்கையாக ஆக்சிஜனை உண்டாக்கவேண்டும் இது மிக முக்கியமானது. நாம் கொடுக்கும் தீவனம் அனைத்தையும் இறால் எடுத்துக்கொள்ளாது. அதாவது தோல் உரிக்கும் நேரத்தில் உணவை எடுத்துக்கொள்ளாது. அந்த சமயத்தில் ஆறு மணி நேரம் நீருக்கு அடியில் அமர்ந்துவிடும்.

- அப்போது இடும் தீவனங்கள் அம்மோனியாவாக மாறிவிடும். இது இறாலுக்கு எரிச்சல் தன்மையை ஏற்படுத்தும். தாவர நுண்ணுயிரிகள் அழிந்தவுடன் செயற்கை முறையில் ஆக்சிஜனை உருவாக்க வேண்டும்.

## அறுவடை :

- ஒரு ஏக்கரில் இரண்டு லட்சம் இறால் குஞ்சுகள் விடும்போது எப்படியும் 20 சதவீத இறால் குஞ்சுகள் இறந்துவிடும். மீதமுள்ள 1 லட்சத்து 60000 இறால் குஞ்சுகள் மூலம் 90 நாளில் மூன்றரை டன் வரை இறால் கிடைக்கும்.

- எனினும் இறால் வளர்ப்புப் பயிற்சியில் கலந்து கொண்டு அதில் உள்ள தொழில்நுட்பங்களை நேரடியாக பார்த்து கற்றுக் கொண்டு அதன் பிறகு இறால் வளர்ப்பில் ஈடுபட வேண்டும்.

# முயல் வளர்ப்பு !

ஆடு, மாடு, கோழி என பல்வேறு கால்நடைகளை வளர்த்து அதன் மூலம் நல்ல லாபம் பார்த்து வருகின்ற நிலைமையில் குறைந்த முதலீட்டில் லாபம் கொடுக்கும் முயல் வளர்ப்பு தொழில் பற்றி காண்போம்.

## வளர்ப்புக்கு தேவையான இனங்கள் :

- முதலில் முயல் வளர்ப்புக்கு ஏற்ற நல்ல முயல்களை தேர்வு செய்ய வேண்டும். பொருளாதார பலன்களை அதிகளவில் பெற தகுந்த இனங்களைத் (வெள்ளை ஜெயண்ட், சாம்பல் ஜெயண்ட் நியூசிலாந்து வெள்ளை மற்றும் அங்கோரா இனங்கள்) தேர்வு செய்ய வேண்டும். இவற்றில் அங்கோரா இன முயல்களை வெப்பம் குறைந்த (15-20 ℃) மலைப்பிரதேசங்களில் மட்டும் வளர்க்க வேண்டும்.

- இனப்பெருக்கம் செய்ய பயன்படும் ஆண் மற்றும் பெண் முயல்கள் வெவ்வேறு இனமாகவும் ஒரு வருடத்திற்கு குறைவாகவும் எந்த குறைபாடும் இல்லாத முயல்களை தேர்வு செய்ய வேண்டும்.

## இடம் மற்றும் குடில் தேர்வு செய்தல் :

- ✓ குறைந்த எண்ணிக்கையில் உள்ள முயல்களுக்கு ஒற்றை அடுக்கு கூண்டு அமைப்பே போதுமானது.

- ✓ அதிக அளவில் வளர்க்கும் முயல் பண்ணைகளுக்கு ஒன்று (அ) இரண்டு அடுக்குள்ள கூண்டு அமைப்புடைய கூடாரங்கள் அமைக்க வேண்டும்.

- ✓ முயல் வளர்க்கும் குடில்களை அஸ்பெட்டாஸ் (அ) தென்னங்கீற்று கொண்டு கூரையை அமைக்க வேண்டும்.

- ✓ எந்த விதமான இரை தேடும் பறவைகளும் உள்ளே நுழையாதவாறு கூண்டை அமைக்க வேண்டும்.

- ✓ மேலும் வெப்பநிலை 10-30 ° செல்ஸியஸ் அளவும் ஈரப்பதம் 60-70% அளவும், வருடம் முழுவதும் உள்ள இடங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

- ✓ மேலும் முயல்களுக்கு சுத்தமான நீர், மின்சாரம், தீவனங்களை வழங்குதல், தீவன உணவு, மருத்துவ உதவி ஆகியவை அருகில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

- ✓ ஒவ்வொரு முயலுக்கும் போதுமான இடம் ஒதுக்க வேண்டும். கூண்டை நுண்ணுயிர் நீக்கம் செய்து சுத்தமாகப் பராமரிக்க வேண்டும்.

- ✓ மேலும் வளர்ந்த ஆண் முயலுக்கு (1.5 * 1.5 * 1.5) அளவுள்ள கூண்டும் பெண் முயலுக்கு (2.0 * 2.5 * 3.0) அளவுள்ள கூண்டும் ஏற்றது.

- ✓ இதில் தீவனம் மற்றும் தண்ணீர் கொடுப்பதற்கு என சிறிய பாத்திரம் அல்லது கொள்கலன்களை கட்டிவிட வேண்டும். கூண்டுகளை தினந்தோறும் பிரஷ் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

**முயல் வளர்ப்பின் நன்மைகள் :**

- ❖ முயல்கள் அதிகளவில் இனவிருத்தி செய்யும் தன்மையுடையது.

- ❖ பலதரப்பட்ட தீவனங்களை அதிகளவில் உணவாக எடுத்துக் கொள்வதால் சிறிய தொகையை முதலீடு செய்து முயல்களை வளர்க்கலாம்.

- ❖ ஆரம்ப முதலீடு மிகவும் குறைவு.

- ❖ மிக விரைவில் லாபம் கிடைக்கப் பெறும். அதாவது முயல் வளர்ப்பு ஆரம்பித்த 6 மாத காலத்திலிருந்தே பெறலாம்.

## வால் சேவல் வளர்ப்பு !

சேவல்கள் இறைச்சிக்காகவும் அழகுக்காகவும் சண்டை போன்ற கிராம வாழ்வியல் விளையாட்டுகளுக்காகவும் வளர்க்கப்படுகின்றன. இந்த வகை சேவல்கள் மற்றும் கோழிகளை இனப்பெருக்கம் செய்து விற்பனை செய்வதன் மூலம் அதிக லாபம் பெறலாம்.

- ❖ **வால் சேவல் :**

- ❖ சேவல் வளர்ப்பு என்பது மிகச்சிறந்த வருவாய் தரும் தொழிலாக மாறி இருக்கிறது. குறிப்பாக வால் சேவல்கள் சந்தையில் நல்ல விலைக்குப் போகின்றன.

- ❖ தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வரும் பறவை இனம் இந்த வால் சேவல் ஆகும்.

- இந்த சேவல்கள் பல்வேறு பருவநிலைகளையும் நோய்களையும் தாங்கி வாழும் திறன் படைத்தவை.

- நாட்டுரக சேவல்களான இவற்றை நோய்கள் எளிதில் தாக்காது என்பதால் இதை வளர்க்க சிரமம் கிடையாது.

- இவை பார்க்க அழகான தோற்றம் கொண்டவையாக இருப்பதால் இவற்றை தற்போது வீடுகளில் அழகுக்காகவும் வளர்க்கிறார்கள். இந்த வகை சேவல்களுக்கு எப்போதும் நல்ல விலை இருந்து வருகிறது.

- இதன் வால் நீளம் மற்றும் நிறத்தை வைத்து இவற்றின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. வால்சேவல்களின் உடல் ஆரோக்கியத்தை பொருத்து இவற்றின் வால்களின் நீளமும் பளபளப்பும் அமையும்.

**உணவு :**

- இவற்றுக்கு சத்துள்ள தீவனத்தை கொடுத்து வளர்க்க வேண்டும். இந்த ரக சேவல் குஞ்சுகளை பெருவதற்கு இதே இனத்தை சேர்ந்த கோழிகளை வளர்த்து அதன் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

- வால் சேவல் இனத்து கோழிகள் 1 கிலோ ரூ. 300 முதல் 350 வரை கிடைக்கின்றன. இவற்றை ரகம் பார்த்து வாங்கி சேவலுடன் இனப்பெருக்கம் செய்ய வேண்டும்.

**நேரம் மற்றும் தீவனம் :**

- சேவல் மற்றும் கோழி பராமரிக்க நாளொன்றுக்கு சுமார் 3 மணி நேரம் செலவிட வேண்டும். தீவனங்களை ஒரு கோழிக்கு 250 கிராம் அளவு ஒரு நாளைக்கு கொடுக்கலாம். இவற்றுடன் உணவுக்கழிவு, தவிடு, குருணை போன்றவற்றையும் சேர்த்துக் கொடுக்கலாம்.

- காலை 1 மணி நேரம் சேவலுக்கு உணவளிப்பதோடு மாலை 2 மணிநேரம் கோழிகள் இடத்தை சுத்தம் செய்து அடைக்கும் பணியில் ஈடுபட வேண்டும்.